பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 03 வியாழக்கிழமை 17.03.2022 கதிர் 132

### இனிது ரகசியம் அல்ல!

இரண்டு தடவைகள் தள்ளிப் போன தமது டெல்லி 'விசிட்'டை திடுதிப்பென மேற்கொண்டமை மட்டுமல்லாது, முன்னைய பயணங்கள் போலல்லாது இம்முறை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தும் இருக்கின்றார் இலங்கை நிதி 2

# தற்போதைய நெருக்கடி அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது!

## கைவிரித்தார் ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் தற்போது எழுந்துள்ள நெருக்கடிகளால் மக்கள் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். இந்த நெருக்கடி நிலைமை அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் கூறினார். 12



## பொருளாதாரச் சிக்கல் நிலைக்கு நிதி அமைச்சர் பஸிலே பொறுப்பு

### கம்மன்பில எம்.பி. குற்றச்சாட்டு



இலங்கை ரூபாவின் பெறுமதிவீழ்ச்சிமற்றும்தற்போதைய பொருளாதார சிக்கல்களுக்கு நிதிஅமைச்சர்பஸில்ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும்.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் தற்போது மருந்துப் பொருள்கள் இன்றி ஏற்படுகின்ற ஒவ்வொரு 12

## மோடி - பஸில் சந்திப்பு



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அந்நாட்டு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று சந்தித்துள்ளார்.

பஸில் 12

## இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கை மீனவர்கள் 6 பேர் பயணித்த மீன்பிடிப் படகு ஒன்று இந்தியக் கடலோரக் காவல் படையினரால் நேற்று மாலை பிடிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், தூத்துக்குடி கடற்பரப்பில் வைத்தே மீன்பிடிப் படகுடன் இலங்கை மீனவர்கள் அறுவரும் 12

## ஒரு இலட்சம் ரூபாவுக்காக நாங்கள் போராடவில்லை

### நீதிக்காகவே போராடுகின்றோம் என்கின்றனர் உறவுகள்

ஒரு இலட்சம் ரூபாவையும், சான்றிதழையும் தந்து நீதியை இல்லாமல் ஒழிப்பதற்காகவே நீதி அமைச்சர் அலி சப்ரி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

– இவ்வாறு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 12



## மலையகத் தமிழர் அபிலாஷைகள் ஆவணம் ஜப்பானியத் தூதுவரிடம்

### கையளித்தது மனோ அணி

மலையகத் தமிழர் அபிலாஷைகள் ஆவணம் ஜப்பானியத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷியிடம், நேற்று தமிழ் முற்போக்குக் கூட்டணியால்கையளிக்கப்பட்டது.

ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் நிகழ்ந்த இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் 9



## தமிழரின் உயிர் ஆடு, மாடுகளைவிடக் கேவலமானதா?

### முன்னாள் எம்.பி. சுரேஷ் சீற்றம்

இலங்கையில் ஆடு, மாடுகளுக்கான விலையே இலட்சக் கணக்கில் இருக்கின்றபோது ஒரு மனித உயிருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு என்பதிலிருந்து சிங்கள ஆளும் வர்க்கத்தினர் தமிழ் மக்களை எவ்வளவு தூரம் ஒருகிள்ளுக்கீரை போல் எடைபோடுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

– இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க. சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுமையான விவரம் வருமாறு:–

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் அல்லது எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்னும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என அமைச்சரவை முடிவுசெய் துள்ளது என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

இந்தச் சந்திப்பை அடுத்து, கடந்த சில மாதங்களாக இலங்கை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இந்தியக் கடன் உதவி இலங்கை அரசின் கைகளுக்குக் கிட்டும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனாலும் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்துக் கிடக்கும் நிதிப் பற்றக்குறையுடன் ஒப்பிடுகையில் இந்தியா இப்போது வழங்கப்போகின்ற கடன் வெறுமனே 'ஆனைப் பசிக்கு சோளப் பொரி'தான்!

2022இல் நாடு செலுத்த வேண்டிய கடன் தவணைக் கட்டணங்கள் மட்டும் 690 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் இரண்டு லட்சம் கோடி ரூபா) ஆகும்.

இந்தியாவிடமிருந்து இப்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக நூறு கோடி அமெரிக்க டொலர்களும் (சுமார் முப்பதாயிரம் கோடி ரூபாவும்), எரிபொருள் கொள்வனவுக்கு ஐம்பது கோடி டொலரும் (சுமார் பதினையாயிரம் கோடி ரூபாவும்), அவசரக் கடன் நெருக்கடிக்கான தற்காலிக ஈடு செலுத்தல் கடனாக நாற்பது கோடி டொலரும் (சுமார் பன்னிரெண்டாயிரம் கோடி ரூபாவும்) கிடைக்கவிருக்கின்றன.

இந்த உதவிகள் நாட்டின் கழுத்தை இறுக்கும் பொருளாதாரத்தில் சற்று மூச்சுவிட நிம்மதியைத் தரும். மற்றப்படி இக் கடனும் நாட்டை மேலும் கடப்பாட்டுக்கு உள்ளாக்குமே தவிர, இந்த நிரந்தர நெருக்குவாரத்தில் இருந்து மீட்கப் போவதில்லை என்பதை பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை நிதி அமைச்சர் பஸிலின் புதுடில்லி 'விசிட்', அவருக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு ஆகியவை தொடர்பில் இந்திய ஊடகங்களில் வந்த செய்திகளை ஊடுருவி, நோண்டி, துளாவி ஒரு விடயத்தைத் தேடிப் பார்த்தேன்.

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக ஏதும் பிரஸ்தாபிக்கப்பட்டதா என்று தடவித் தடவிப் பார்த்தேன். ஒன்றிலும் அது பற்றி குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதை இந்த கடன் உதவித் திட்டத்துக்கான நிபந்தனைகளில் ஒன்றாகப் புதுடில்லி விதிக்கலாம் என்ற எங்கள் பக்கத்தில் பலரின் (நான் உட்பட) நப்பாசையுடன் கூடிய எதிர்பார்ப்பு சரிவந்ததாக எந்தத் தகவலும் இல்லை.

புராண காலத்து இராமன் – இராவணன் தொடர்பாடலைத் தொட்டு, அதனடிப்படையில் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்கும் திட்டத்துக்கு அதனை எப்படிப் பயன்படுத்தலாம் என்று தமக்குள் பேசிக் கொண்ட தலைவர்கள், வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் அழிந்து போகும் இருப்புக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பது குறித்து பேசாமல் விட்டனர் என்பது மனதை நெருடியது.

எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஐக்கியமாகப் பிட்சா பாத்திரம் ஏந்தியும் 'தர்ம தொரை'யின் கடைக்கண் பார்வை இந்த ஏழைகள் பக்கம் திரும்பாதமை மனதை நெருடுவதாகவே இருந்தது. நம்மை நாமே நோவதைத் தவிர, நம்மால் யாது செய்ய முடியும்?

★ ★ ★

"யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனார், தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்றும் விளக்கினார்.

ஆனால், நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டவை அல்ல. ''இந்த நெருக்கடி உருவாவதற்குக் காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசை விமர்சிக்கின்றார்கள்" – என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

தாம் ஆட்சிக்கு வந்ததும் அரசியல் புளுகத்தில் வரி விலக்கு என்ற பெயரில் சலுகைகளை வழங்கி நாட்டுக்கு 90 ஆயிரம் கோடி ரூபா இழப்புக்கு வழி செய்தமை, சீனிக்கு வரியை விலக்கிய பின்னரும் சீனி விலையைக் குறைத்து கட்டுப்பாட்டு விலையை அறிவிக்காமல், இறக்குமதி செய்த வர்த்தகர்கள் கிலோவுக்கு ஐம்பது ரூபாப் படி பல்லாயிரம் கோடி ரூபாவைக் 'கொள்ளையடிக்க' உதவியமை, நாட்டு விவசாயிகளின் பெரும்போகப் பயிர்ச் செய்கையையே நாசமாக்கும் கண்மூடித்தனமான முடிவை நட்டாமுட்டித்தனமாக நடைமுறைப்படுத்தியமை என்று அவர் செய்த – செய்யாமல் விட்ட – குளறுபடிகள் அதிகம்.

பொருளாதார விடயங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை முன்னைய இருண்ட ஆட்சிக்காலத்திலும் இப்போதும் 'மிஸ்டர் டுவண்டி பேர்சனிடம்' (Mr.20 Person இடம்) கையளித்து நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்கள், இப்போது நல்ல பிள்ளைகளாக நடித்துக் கொண்டு, குற்றச்சாட்டு விரலை மற்றவர்கள் மீது நீட்டுவது மகா பெரும் நடிப்பாகும். நாடு தாங்காது சாமி...!

★ ★ ★

தமிழர் அரசியல் தொடர்பாகவும் ஏதேனும் குறிப்பிடத்தானே வேண்டும்? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று அவருடனான பேச்சில் கலந்து கொள்வது என்ற தமிழ் கூட்டமைப்பின் முடிவை கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ரெலோ தாறுமாறாக விமர்சித்திருப்பது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சினம் கொள்ள வைத்திருப்பதாகத் தெரியவந்தது.

நேற்றுக் கொழும்பு தமிழ் தேசியப் பத்திரிகை ஒன்றில் ரெலோவின் தலைவரும் செயலாளரும் சம்பந்தனின் தீர்மானத்தைக் காட்டமாக விமர்சித்து கருத்து வெளியிட்டனர் என ஒரு செய்தி பிரசுரமாகி இருந்தது. அந்தச் செய்தியை வரைந்த செய்தியாளரைத் தன்னோடு தொடர்பு கொள்ளுமாறு கோரிய சம்பந்தன், ரெலோவுக்கு பதிலடி கொடுக்கும் கருத்துக்களை அந்தச் செய்தியாளரிடம் வழங்கினார் என்றும், அது இன்று அந்தப் பத்திரிகையில் வெளியாக இருந்தது என்றும் அறியவந்தது.

கூட்டமைப்புக்குள் அண்மைக்காலமாக ரெலோ செய்து வரும் குசும்புத்தனங்கள் தொடர்பில் பார்த்துக்கொண்டு அமைதி பேணி வந்த கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன், இப்போது வெளிப்படையாகப் பதிலடி கொடுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார் எனத் தெரிகிறது. விவகாரம் சந்தைக்கு – சந்திக்கு – வந்து விட்டமையால் அது மேலும் சூடு பிடிக்கும் என்பது நிச்சயம்.

– மின்னல் –

## தமிழரின் உயிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திருவிழாக்களிலோ, பொதுநிகழ்ச்சிகளிலோ அல்லது வழிதெரியாமல் தடுமாறி தொலைந்து போனவர்கள் அல்லர். இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் வேண்டுகோளுக்கிணங்க சரணடைந்தவர்களும் இராணுவச் சுற்றிவளைப்புகளின்போது பல பேர் முன்னிலையில் கைதுசெய்யப்பட்டவர்களும், இராணுவத்தினரின் கோரிக்கைக்கிணங்க உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவர். ஆகவே, இவர்கள் எவ்வாறு காணாமல் போகமுடியும் என்பது முதலாவது கேள்வி.

அரச படைகளிடமும், பொலிஸாரிடமும் புலனாய்வுப் பிரிவினரிடமும் ஒப்படைக்கப்பட்ட பிறகு எவ்வாறு காணாமல் போக முடியும்? இவர்கள் படைத்தரப்பினரால் கொலை செய்யப்பட்டார்களா என்ற அச்சம் அவர்களின் உறவினர்கள் மத்தியில் நிறையவே இருக்கின்றது.

ஆகவேதான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச விசாரணை ஒன்றைக் கோரி நிற்கின்றார்கள். ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளின் அழுத்தம் காரணமாக மரணச் சான்றிதழ் ஒன்றைக் கொடுத்து இந்த விவகாரத்தை முடித்துவிடலாம் என்று அரசு யோசிக்கின்றது. இதனைப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவது கிடையாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் சுமார் பத்து வருடங்களுக்கும் முன்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுவுக்கு இன்றுவரை நீதிவழங்கப்படவில்லை. இந்நிலையில் அரசின் இந்த அறிவிப்பால் எமது மக்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, அரசு ஒரு பிழையான அணுகுமுறையினூடாக இந்தப் பிரச்சினைக்கு முடிவைக்காண முனைகின்றது. அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது எமது நோக்கமல்ல.

ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பொறுப்புக்கூறுவது இன்றியமையாதது. அதிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்வதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஆகவே, இலங்கை அரசின் கபடத்தனமான நடவடிக்கைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு இது தொடர்பான ஒரு சர்வதேச விசாரணையை சர்வதேச சமூகம் நடத்தியாக வேண்டும். அதன் மூலம் மாத்திரமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதி கிடைக்க முடியும்.

இலங்கையில் ஆடு, மாடுகளுக்கான விலையே இலட்சக்கணக்கில் இருக்கின்றபோது ஒரு மனித உயிருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு என்பதிலிருந்து சிங்கள ஆளும் வர்க்கத்தினர் தமிழ் மக்களை எவ்வளவுதூரம் ஒருகிள்ளுக்கீரை போல் எடைபோடுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சர்வதேச விசாரணை ஒன்று நடக்கும் பட்சத்தில் சர்வதேச நியமங்களக்கு அமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியும் கணிசமான அளவு நட்டஈடும் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது. ஆகவே, இலங்கை அமைச்சரவையின் இந்தத் தீர்மானம் என்பது வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சுவதாகவே அமையும்.

இலங்கைத் தீவின் சமபங்காளிகளான தமிழ் மக்களின் உயிர்களையே மதிக்கத் தெரியாத இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்கள் அச்சமின்றியும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒரு மூன்றாந்தரப்பின் தலையீடின்றி சாத்தியமற்றது என்பது தெளிவாகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு மேற்கொள்கிறது என்றால் கூட்டத்தொடர் முடிந்தவுடன் எப்படி நடந்துகொள்ளும் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் என்பது குப்பைகூடைக்குள் போடுவதற்கே தகுதியானது.

அரசின் இந்த மோசமான நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம், சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஜனநாயக முற்போக்கு சக்திகள் அனைவரும் இணைந்து கண்டிப்பதுடன் சர்வதேச விசாரணைக்கு இலங்கையை உட்படுத்த வேண்டும் என்று கோருகின்றோம் – என்றுள்ளது.

சிறுநீரகம் தேவை
31 வயது இளைஞர் ஒருவருக்கு
ஓ பொசிட்டிவ் (O+) ரக சிறுநீரகம்
ஒன்று தேவை.
வழங்க முன்வருபவர்கள்
076 237 6603
என்னும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.



# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மத்திய வங்கி ஆளுநர் நீடிப்பாரா?

பொருளாதார நெருக்கடியால் – குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடு, விலையுயர்வு, மின்வெட்டு போன்றவற்றால் – மக்கள் பெரும் நெருக்குவாரங்களை எதிர்கொண்டிருக்கையில் – அற்ப விடயங்களை ஒட்டி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் அரசின் முக்கிய பிரமுகர்களினால் மாறி மாறி வெளியிடப்பட்ட – ஒன்றுக்கொன்று முரணான – அறிவிப்புகள் மற்றும் அறிக்கைகளே பல குழப்பங்களுக்கும் அடிப்படை என்று அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும விசனம் தெரிவித்திருக்கின்றார்.

உண்மைதான். என்ன பேசுகின்றோம், எது பேசுகின்றோம் என்று தெரியாமல் அமைச்சர்கள் பலர் உளறிக்கொட்டியமை கூட பல குழப்பங்களும் காரணம்தான்.

பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கும் நாட்டின் நிதி, பொருளாதார, நிர்வாகப் பிரச்சினையிலும் கூட இதுதான் நிலைமை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிதி நிர்வாகம் மற்றும் பொருளாதார மேலாண்மையில் இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இந்த விடயத்தில் இந்த இரண்டு தரப்புகளுமே ஒன்றுக் கொன்று முரண்பட்டு நின்று, கொள்கைக் கோட்பாடுகள் பேசி, குழப்பியடித்தமை வெளிப்படையானது.

இதன் விளைவைப் புரிந்து கொண்டுள்ள ஆட்சித் தலைமை, மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ராலை அதிரடியாக மாற்றக் கூடும் என்றும், திறைசேரியின் அங்கத்தவர்களில் கூட மாற்றம் வரலாம் என்றும் பொருளாதார, அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

நிதி, பொருளாதார கையாள்கை முறைமையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நிலைப்பாட்டுக்கும் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலின் கருத்தியலுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவது வெளிப்படையானது. பகிரங்கமானது.

நிதி நெருக்கடியிலிருக்கும் நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவதா என்ற அடிப்படைக் கொள்கைக் கோட்பாட்டு விடயத்திலேயே நிதி அமைச்சுக்கு மாறான கருத்தியலை மத்திய வங்கி ஆளுநர் வெளியிட்டு வருகின்றார். சர்வதேச நாணய நிதியத்திடம் சரண்புகுவதை அவர் எதிர்க்கின்றார். அதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான தொடர்பாடல் விடயத்தைக் கையாளும் பொறுப்பை இலங்கை மத்திய வங்கியை ஓரம்கட்டி, வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலம் முன்னெடுக்கின்றது இலங்கை நிதி அமைச்சு.

ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியை செயற்கையாகப் பிடித்து வைத்திருக்கும் நிலைப்பாட்டை எடுத்து, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால். தம்முடைய அந்தக் கொள்கையை அவர் பகிரங்கமாக வெளியிட்ட அடுத்த நாள் டொலரின் பெறுமதி மீதான அந்த செயற்கைக் கட்டுப்பாட்டை நீக்கி, அதனை மிதக்க விடும் முடிவை அரசு அதிரடியாக எடுத்து அறிவித்த போது, மத்திய வங்கி ஆளுநரின் நிலைமை பெரும் சங்கடமாகப் போயிற்று.

மத்திய வங்கி ஆளுநர் பதவி என்பது ஆறு ஆண்டு காலத்தைக் கொண்டது. இப்போதைய பதவி 2016இல் பதவியேற்ற கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியுடன் ஆரம்பமானது. அவர் 2016 ஜுலையில் பதவியேற்றார். 2019 டிசெம்பர் 24இல் ஒய்வுபெற்றார். அவரது இடத்துக்கு நியமனம் பெற்ற பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷமன் செப்ரெம்பர் 2021இல் பதவி விலக அந்த இடத்துக்கு நிவாட் கப்ரால் நியமனமானார்.

ஆளுநர் பதவிக்கான ஆறு ஆண்டுகள் பதவிக் காலம் வரும் ஜுன் மாதத்துடன் முடிகின்றது. அதன் பின்னரும் அப்பதவியில் தொடர கப்ராலுக்கு புதிய நியமனத்தை ஜனாதிபதி வழங்குவாரா? அல்லது அதற்கு முன்னரே அவரைப் பதவியில் இருந்து தூக்குவாரா? பெரும்பாலும் பின்னதுதான் நடக்கும் என்கின்றார்கள் துறைசார் அவதானிகள்.

# அதள பாதாளத்திற்கு சென்ற இலங்கையின் பொருளாதாரம்!

## வெளிநாட்டு கையிருப்பு குறைந்தது எப்படி?

2019 டிசெம்பர் 31 திகதியன்று கொவிட் தொற்றுநோய் பரவலின் போது இலங்கையில் 760 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டு கையிருப்பு இருந்தது. எனினும், இந்த பெப்ரவரி இறுதியில் 210 கோடியாக குறைந்துள்ளது.

இதனால் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 72.36 வீதம் வீழ்ச்சியடைந்து நாட்டில் பொருளாதார நெருக்கடியை உருவாக்கி மருந்து, எரிபொருள், எரிவாயு, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெருக்கடி தீவிரமடைந்ததையடுத்து, இலங்கை மத்திய வங்கி கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி டொலரின் பெறுமதியான 202 ரூபாவைத் தக்கவைத்துக் கொள்ள அனுமதித்ததுடன், இன்று பல வர்த்தக வங்கிகளின் விற்பனை பெறுமதி 275 ரூபாவாக அதிகரித்துள்ளன.

நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில், அமைச்சரவை அமைச்சர்கள், திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் அடங்கிய பொருளாதாரக் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஆலோசனை வழங்க நிபுணர் குழுவொன்றையும் நியமித்துள்ளார். இதேவேளை, நெருக்கடிக்குத் தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கான தீர்மானத்துக்கு கடந்த அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்ததன் பின்னணியில் அமைச்சரவை அந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்த தூதுவர், செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் சந்தித்து பேசியிருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதனிடையே, சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரிகளிடம் இலங்கையின் முன்மொழிவுகளை முன்வைப்பதற்காக நிதியமைச்சர் ஏப்ரல் நடுப்பகுதியில் வாஷிங்டனுக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, 100 கோடி அமெரிக்க டொலர் கடன் வசதி மற்றும் 500 கோடி டொலர் பெற்றோலியம் தொடர்பான உற்பத்திக் கடன் வசதி தொடர்பான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்காக இந்தியா சென்றுள்ளார்.

100 கோடி டொலர் கடன் வசதி அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

ஒப்பந்தத்தின் கீழ் உள்ள மொத்தக் கடன்களில் 75 சதவிகிதம் இந்தியாவிலிருந்து வரும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்காக இருக்கும், மீதமுள்ள 25 சதவிகிதம் வேறு எந்த நாட்டிலிருந்தும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்காக இருக்கும்.

# எந்தவகை மருந்துகளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு இல்லை!

## பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



அரசியல் இலாபங்களுக்காக நாட்டில் மருந்து பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக பல்வேறு பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு நாட்டில் எந்த வகை மருந்துகளுக்கும் தட்டுப்பாடு இல்லை என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் உரியமுறையில் நடைபெறவேண்டும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு



ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், இல்லையெனில் மீண்டும் தொழிற்சங்க போராட்டத்தை நடத்துவோமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் .

மேலும் அவர் தெரிவிக்கையில் – இடமாற்றம் தொடர்பாக தொழிற்சங்க சபையால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாது, வடமாகாண கல்விப் பணிப்பாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றார். இதன் மூலமே கல்வித்துறைக்கு மிக நெருக்கடியான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இந்த இடமாற்றங்கள் அதாவது வெளிமாவட்ட ஆசிரியர்களின் சேவையின் அடிப்படையில் இடமாற்றம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் கல்வி அமைச்சின் அலுவலகத்தையும், ஆளுநர் செயலகத்தையும் முடக்குவோம்.


அரசியல் செல்வாக்குக் காரணமாக சில ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு உள்வாங்கப்படவில்லை. அதாவது அவர்களுக்கு வசதியான இடத்தில் நியமனங்களைப் பெற்று நீண்ட காலமாக உரிய இடமாற்றம் இல்லாமல் அதே பாடசாலையில் சேவை செய்து வருகின்றனர்.

இது தவறு. இடமாற்ற கொள்கை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஓர் உயிரின் பெறுமதி ராஜபக்ஷக்களுக்கு வெறுமனே ஒரு லட்சம் ரூபா மாத்திரமே!

## மனித உரிமை முன்னாள் ஆணையர் அம்பிகா விசனம்



காணாமற்போனோரின் குடும்பத்தினருக்கு ஒருதடவை மாத்திரம் ஒரு லட்சம் ரூபாவை வழங்க அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் விசனம் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோரின் குடும்பங்கள் மரணச் சான்றிதழையோ அல்லது இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என்றும் மாறாக அவர்கள் உண்மையையும் நீதியையுமே கோருகின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டினார். ராஜபக்ஷ அரசைப் பொறுத்த மட்டில் ஓர் உயிரின் பெறுமதி வெறுமனே ஒரு லட்சம் ரூபா மாத்திரமே என்றும் இது அவமரியாதை செய்யும் வகையிலான மிகமோசமான செயல் என்றும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அரசு எந்தவொரு தரப்பினரையும் பொறுப்புக்கூறச் செய்வதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் மாறாக அவர்கள் உண்மையையும் நீதியையும் குழிதோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றார்கள் என்றும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

# மரணச் சான்றிதழையோ, இழப்பீட்டையோ பெரும்பாலான உறவுகள் கோரவில்லை!

## தியாகி ருவன்பத்திரன சுட்டிக்காட்டு

பெரும்பாலான உறவுகள் மரணச் சான்றிதழையோ, இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய ஆய்வாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான தியாகி ருவன்பத்திரன தெரிவித்தார்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தில் 'காணக்கிடைக்கவில்லை' எனும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டவர்களின் குடும்ப மீள்வாழ்விற்காக ஒருமுறை மாத்திரம் ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அரசின் குறித்த முடிவு தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் –

உள்ளக மற்றும் சர்வதேச ரீதியில் அரசாங்கம் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிடுகின்றது என சுட்டிக்காட்டினார்.

காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான குழுக்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் ஸ்தாபிக்கப்பட்டன என ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அரசு உறுதியளித்தது என அவர் குற்றம் சாட்டினார்.

இருப்பினும் காணாமல்போனோரின் பெரும்பாலான குடும்பங்கள் மரண சான்றிதழையோ இழப்பீட்டையோ எதிர்பார்க்கவில்லை என்றும் மாறாக அவர்கள் தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையையே எதிர்பார்க்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இதுவரையில் காணாமல்போனோர் தொடர்பாக கிடைக்கப்பெற்றிருக்கும் 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக 25 விசாரணைக்குழுக்கள் நியமிக்க கடந்த வாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுப்பு!

கொவிட் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாத மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் ஊடாகவும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களை கொரேனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் நேற்று (புதன் கிழமை) கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்காகத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் ஆர்வத்துடன் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதைக் காணமுடிந்தது.



# குத்துச்சண்டை வீரர் இந்துகாதேவிக்கு வாகை மங்கை எனும் சிறப்பு கௌரவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் குத்துச்சண்டை வீராங்கனை செல்வி கணேஸ் இந்துகாதேவிக்கு 'வாகை மங்கை' எனும் சிறப்பு கௌரவத்தினை வழங்கியுள்ளார்கள். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தினத்தில் அவருக்கு இந்தக்கௌரவம் வழங்கப்பட்டது.

'பெண் சமத்துவம் காணும் உலகை வெற்றிகொள்வோம்' எனும் தொனிப்பொருளில் துணுக்காய வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் மாலதி முகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அலுவலக பெண் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

தடைகளைத் தாண்டிய சாதனைப் பெண்ணிவள், தரணியில் இன்னும் பல சாதனை படைத்திட துணுக்காய் கல்வி வலயத்தினால் 'வாகை மங்கை' எனும் சிறப்பு கௌரவதை கணேஸ் இந்துகாதேவிக்கு வழங்கி கௌரவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் பணியாற்றுகின்ற தொழிலாளருக்கு புதிய திட்டம்

இலங்கையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி தொழிலாளர் துறை மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்யும் வகையில் இணைய முகவரியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி https://cms.labourdept.gov.lk/ என்ற இணைய முகவரி மூலம் பணியாளர்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணைய முகவரியின் ஊடாக சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பணியாளர்களின் பிரச்சினைகளை பதிவு செய்ய முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் விரைவில் மாற்றம்!

## நிபுணர்கள் சுட்டிக்காட்டு

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் விரைவில் ஆளுநர் பதவியில் இருந்து மாற்றப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் பொருளாதாரம் கையாளப்படும் விதம் தொடர்பாக நிதியமைச்சருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றமையை சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள் மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து விரைவில் கப்ரால் மாற்றப்படுவார் நாணயசபையும் முற்றாக மாற்றப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் கடந்த சில நாள்களாக தனக்கும் நிதியமைச்சருக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுவதை தயக்கத்துடன் நிராகரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மேலும் நிதியமைச்சு இலங்கை மத்திய வங்கியை கலந்தாலோசிக்காமல் சர்வதேச நாணய நிதியம் மற்றும் அமெரிக்காவிற்கான இலங்கை தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளமையும் மத்திய வங்கியின் ஆளுநரின் எதிர்காலம் தொடர்பாக வெளியாகும் தகவல்களை உறுதிப்படுத்தும் விதத்தில் காணப்படுகின்றது.

# 18 வயதுக்கு குறைவானோருக்கு மரண தண்டனை வழங்காமலிருக்கும் சட்டக் கோவையில் திருத்தம்

நாட்டில் 18 வயதுக்கு குறைவானவர்களை சிறுவர்களாகக் கருதி அவர்களுக்கு மரண தண்டனை வழங்காமலிருக்கும் வகையில் குற்றவியல் வழக்கு கோவை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

ஏதேனுமொரு நபர் குற்றமிழைக்கும் போது, குறித்த நபரின் வயது 18 வயதுக்குக் குறைவாயின் மரண தண்டனை வழங்குவதைத் தடை செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான நீதி வழங்கலுக்கான உடன்பாட்டின் குறைந்தபட்ச ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாக அமையும் வகையில், குற்றவியல் வழக்குக் கோவை சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

மேற்படி சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஐ.நா. கூட்டத்தொடரை இலங்கை வெற்றிகரமாக எதிர்கொண்டதாம்!

## வெளிவிவகார அமைச்சு செயலர் பெருமிதம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரை இலங்கை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தவும் தெளிவுபடுத்தவும் முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் ஜெனீவாவில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன எனவும் அவை மிகவும் பயனுள்ளனவாக அமைந்தன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் தற்போதைய அறிக்கை, யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களை விட சுதந்திர நாட்டின் உள்ளக அரசியலை மையப்படுத்தியுள்ளது என ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற உள் விவகாரங்களை விசாரிக்க உரிமை உள்ளதா என்றும் அது ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி உள்ளதா என்றும் நாங்கள் கேட்டோம். உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பது வாதம், மேலும், ஒரு நாடு நடவடிக்கை எடுப்பதற்கு ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

மனித உரிமைகள் பேரவையின் தலைவருடன் இலங்கைப் பிரதிநிதிகளும் நீண்ட நேரம் கலந்துரையாடினார் எனவும் அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது என அவர் கூறினார். 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள 51 ஆவது அமர்வு இலங்கையின் அடுத்த சவாலாகும்.

சரியான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் சிவில் சமூகம் மற்றும் கல்வியியலாளர்கள் உட்பட அனைவரின் ஆதரவும் தேவை என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் விடுதலைப் புலிகளின் சித்தாந்தவாதிகள் மற்றும் அனுதாபிகள் அடங்கிய மிகச் சிறிய குழுவால் முன்னெடுக்கப்பட்டன எனவும், அவை இலங்கையில் பெரியதாக்கத்தை அந்தப் போரட்டங்கள் ஏற்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டரை வருடங்களில், குறிப்பாக கடந்த ஆறு மாதங்களில் ஏற்பட்டுள்ள தெளிவான முன்னேற்றம் தொடர்பாகக் குறிப்பிட்ட வெளிவிவகார செயலாளர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம், உள்ளிட்ட பல சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.

# நடத்துநர்களே இல்லாத பஸ்களை இயக்க ஏற்பாடு

எதிர்காலத்தில் பஸ் நடத்துநர்கள் இல்லாது பஸ்களை இயக்க தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம் என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அத்துடன் பஸ் பயணங்களுக்கான பயண அட்டையை எதிர்வரும் 27 ஆம் திகதி அறிமுகப்படுத்த உள்ளோம் என அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் பயணிகள் மீதி சில்லறை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இருந்து வரும் சிக்கல் தீர்க்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் திலும் அமுனுகம இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை மக்களை பாதிக்கக் கூடிய சுமை வண்டிகள், சைக்கிள்கள் போன்றவற்றின் கட்டணங்களை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என திலும் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு நீதிவேண்டி

# இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேச உதவியை நாட வேண்டிய நிலையில்

## இமானுவேல் பெர்னாண்டோவும் காட்டம்

இலங்கை அரசு ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளது. இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது என இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை திருமடலில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட மக்களுக்கு எழுதியுள்ள தவக்கால திருமடலில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் திருமடலில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர்.

ஆகவே பவுலடியாரின் கூற்றுப்படி இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும் உயர் நிலையில் உள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுவோம்.

அருளின் காலமாகிய தவக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் மீண்டும் காலடி பதித்துள்ள இவ்வேளையில் நாம் மனமாற்றம் பெறுவதற்கும் நம்மைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் திருமறையில் தெரிவித்திருப்பது போல் ‘இதுவே தகுந்த காலமாகும்’ உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். ‘மாறாக ஆண்டவரின் குரலைக் கேட்பீர்களாக’

நாங்கள் மட்டுமீறிப் பற்றுதல்களிலிருந்து விடுதலை பெற்று நிலையற்றவற்றில் மனதை ஈடுபடுத்தாது நிலையானவற்றில் மேன்மேலும் மனதைச் செலுத்துமாறு எங்களை தூண்டுகின்ற காலமே இந்தத் தவக்காலம் ஆகும்.

இந்தத் தவக்காலத்தில் செபம், தவம், தான தருமம் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை. ஆகவே அவற்றை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

இந்நாள்களில் நம்மை நாமே புதுப்பிப்பதோடு மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள கடமைகள் பொறுப்புக்களையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நம்முடன் வாழ்கின்றவர்களின் ஆன்மீக உலகியல் தேவைகள் மட்டிலும் நாம் அக்கறையும் கரிசனையும் காட்ட வேண்டும். இதைத்தான் இந்த ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.



2023 ஆம் ஆண்டு ரோமாபுரியில் உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது. ‘ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக ஒன்றிப்பு பங்கேற்றல் பணி’ என்ற கருப்பொருளில் அதற்கான ஆயத்தப் பணிகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. இதில் மன்னார் மறைமாவட்டமும் ஈடுபட்டு வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் தனது தவக்கால திருமடலில் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, மின்சாரத் தடை போன்றவை சாமானிய மக்களை மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து தரப்பினரையும் வெகுவாகப் பாதித்து வருகின்றன.

இது மட்டுமல்ல இலங்கை அரசு ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கண்டு பிடித்து நீதியை நிலை நாட்டத் தவறியுள்ளது.

இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

அத்துடன் இறுதிப் போரில் நடந்தேறிய போர்க்குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசே இன்று ஆட்சியில் உள்ளது.

இவ்வாறு ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர். – என அந்தத் திருமடலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பால்மா தட்டுப்பாட்டுக்கு தீர்வு கைலண்ட் பால்மா விநியோகம்

உள்நாட்டு சந்தையில் நிலவும் பால் மா தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அடுத்த மாத ஆரம்ப பகுதியிலிருந்து குறையின்றி நாடு முழுவதிலும் கைலண்ட் பால் மாவைப் பகிர்ந்தளிக்க மில்கோ நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக, இராஜாங்க அமைச்சர் ரி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் திரவ பால் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் சந்தையில் பால் மாவிற்கு தட்டுப்பாடு நிலவியது.

அடுத்த மாதம் முதல் திரவ பாலையும் பால் மாவையும் சந்தைக்கு விநியோகிக்குமாறு தான் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக பெரேராவுக்கு பணிப்புரை வழங்கியிருக்கின்றேன் என இராஜாங்க அமைச்சர் ரி.பி.ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த ஒன்றரை வயதுக் குழந்தை!

அநுராதபுரம் – அழகப்பெருமாகம பகுதியில் ஒன்றரை வயதான பெண் குழந்தை ஒன்று உலக சாதனை படைத்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2020 ஆம் ஆண்டு மே 8ஆம் திகதி பிறந்த ஜரின் என்ற குழந்தை 7 நிமிடங்கள் மற்றும் 6 வினாடிகளில் அதிக எண்ணிக்கையிலான பறவைகளை அடையாளம் கண்டு உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

ஆசிய சாதனை புத்தகத்திலும் இந்தக் குழந்தையின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குழந்தை பூக்கள், விலங்குகள், வாகனங்களை வடிவமைப்பது போன்ற 500 இற்கும் மேற்பட்ட படங்களை குறுகிய நேரத்துக்குள் அடையாளம் காண்பதுடன், 25 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தலைவர்களை அடையாளம் கண்டும் உலக சாதனை படைத்துள்ளது.

குழந்தைக்கு ஒரு வயதாகும் போது பெற்றோர் விலங்குகள் மற்றும் பறவைகளின் புகைப்படங்களை குழந்தைக்கு காண்பித்து அவற்றை அடையாளம் காணும் வகையில் பயிற்சிகளை வழங்கினர் எனவும் தெரிவித்துள்ளனர்.



இருப்பினும், இதுவரை எனது குழந்தையின் திறமையை எந்த தலைவர்களும் பாராட்ட வரவில்லையெனவும், அங்கீகாரமும் வழங்கவில்லை எனவும் குழந்தையின் பெற்றோர் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

# கடல் மாசடைவது தொடர்பாக அக்கரைப்பற்றில் கலந்துரையாடல்





கடல் சுற்றாடல் மற்றும் கரையோர வலயங்கள் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல், குறைத்தல் மற்றும் தடுத்தலுக்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற் கொள்ளும் நோக்கில் விசேட கலந்துரையாடல் ஒன்று அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அக்கரைப் பற்று, மாநகர சபை கேட்போர் கூடத்தில் மாநகர முதல் வர் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச மட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தக்கூடிய அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத் தும் கரையோர பிரதேச முகாமைத்துவ குழுவொன்றை நிறுவும் முனைப்பிலான முதல் கட்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

கரையோர சுற்றாடல் கட்டமைப்புகளின் பாது காப்பை உறுதிப்படுத்தி, பூகோள அபிவிருத்தி இலக்கை அடைந்து, கடல் சார்ந்த பிரதேசங்களைப் பொதுமக் களுக்கு கவர்ச்சிகரமான இடங்களாய் பேணுதல் எனும் நோக்கில் அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட கடல் பிராந்திய வளங்களையும் மேம்படுத்துவது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, மாநகர சபை உத்தியோ கத்தர்கள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, சமுத் திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினர், கரை யோரம் பேணல் திணைக்களத்தினர், மத்திய சுற்றாடல் அதிகார சபையினர், பொலிஸார், மீன்பிடி திணைக் கள உத்தியோகஸ்த்தர் உட்படப் பலர் கலந்துகொண்ட னர்.

# இனி ஆடைகளும் வாங்க முடியாது!

**அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் தெரிவிப்பு**

இலங்கையில் நாளாந்தம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மற்றும் சேவைக ளின் கட்டணங்கள் அதிகரித்த வண்ணம் உள் ளன. இதன் காரணமாக இலங்கை வாழ் மக் களின் வாழ்வாதாரம் நாளுக்கு நாள் பாதிக்கப் படுகின்றது.

அந்த வகையில், மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக அனைத்து ஆடைகளின் விலைகளும் 30 – 31 வீதம் வரை அதிகரிக்க வேண்டியுள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூலப்பொருள்களுக்கான 40 அடி கொள் கலனுக்கு கப்பல் நிறுவனங்கள் இதுவரை 2 லட்சம் ரூபாவை அறவிடுகின்றன.

ஆனால், தற்போது அது ஒரு மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாகத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு பொருளாக இறக்குமதி செய்யும் போது சதுர அடிக்கு அறவிடப்படும் தொகை 6 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபாவை அண் மித்துள்ளது எனவும் அவர்கள் குறிப்பிடுகின்ற னர்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக உள் ளூர் ஆடைத் தொழில்துறை கடும் நெருக்க டியை எதிர்நோக்கி வருகின்றனர் இதனால் ஆயிரக்கணக்கானோர் வேலை இழக்கின்ற னர் எனவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள் ளார்.

# வெட்டுக்காயங்களுடன் விவசாயி சடலமாகக் கரடியனாறில் மீட்பு!

மட்டக்களப்பு – ஈரக்குளம் வயல் பகுதியில் கொட் டகை ஒன்றில் வேளாண்மையைக் காவல் காத்துவந்த விவசாயி ஒருவர் வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கரடிய னாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈரக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயியான 54 வயதுடைய பரசுராமன் ஆறுமுகம் என்றவரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி வயல் பகுதியில் உள்ள வேளாண்மை செய் கையைக் காட்டு மிருகங்களிலிருந்து பாதுகாப்பதற் காக ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டிலிருந்து வயல் பகுதியில் அமைந்துள்ள கொட்டகைக்குச் சென்றுள் ளார்.

அங்கு சென்றவர் திங்கட்கிழமை வீடு திரும்பாத நிலையில் அவரைத் தேடியபோது கொட்டகையில் வெட் டுக்காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடய வியல் பிரிவு அழைக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியு டன் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத் துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடிய னாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊர்காவற்றுறையில் மூவர் ஹெரோயினுடன் மாட்டினர்!

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் மூவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அந்தவகையில் 80 மில்லிகிராம் ஹெரோயினை உடை மையில் வைத்திருந்த மேற்கு வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபரும், 50 மில்லிகிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 20 வயதுடைய சந்தேகநபரும், 550 மில்லிகிராம் ஹெரோயினை உடை மையில் வைத்திருந்த 3 ஆம் கட்டை – ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கைத் தமிழ்ப் பெண்மீது அமெரிக்காவில் துப்பாக்கி சூடு!

அமெரிக்காவில் ராஜி பட்டர்சன் என்ற தமிழ் பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

மேற்படி பெண் ஈழத்தமிழர் தொடர்பான மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டு வரு பவர் எனவும் விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

சிறந்த 20 பெண்கள் என்ற விருதைப் பெறு வதற்காக சிக்காகோ நகருக்கு குடும்பத்துடன் பயணம் செய்துகொண்டிருந்த போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

# கோட்டாவுக்கு எதிர்ப்பு தெரிவித்த அமெ.பெண்!

சமகால அரசு மீது அதிருப்தி அடைந்துள்ள நாட்டு மக்கள் பலர் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபயவை வீட் டுக்கு செல்லுமாறு கோரி சமூக வலைத்தளத்தில் 'ஹோ ஹோம் கோத்தா' என்ற கோஷம் பகிரப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவுக்கு அமெரிக்க பெண் எழுத்தாளர் ஒருவரும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

கெல்ஸைநெல்சன் என்ற அமெரிக்க எழுத்தாளரே இவ்வாறு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பில் டுவிட் டர் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், நான் 'ஹோ ஹோம் கோத்தா' டுவீட் செய்வேன், ஆனால் நான் அமெரிக்கன் என்பதால், 'கம் ஹோம் கோத்தா' மிகவும் பொருத்தமானதாக இருக்கும். நாட்டை சீரழிக்கும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராகப் பல இலங் கையர்கள் நிலைப்பாட்டை எடுப்பதை பார்க்க ஊக்க மளிக்கின்றது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதிவு இலங்கை சமூக வலைத்தள பய னாளர்கள் மத்தியில் அதிகம் பகிரப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமியைத் தாக்கிய தந்தை அம்பாறையில் கைது!

அம்பாறை – பள்ளிக்குடியிருப்பு பகுதியில் 11 வயது சிறுமி யொருவரை தாக்கிய தந்தையொருவர் கைது செய்யப்பட் டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பள்ளிக்குடியிருப்பு பகுதியில் பிஸ்கட் பெற்றுத்தருகின் றேன் சிறுமியின் தந்தை கடைக்கு அழைத்துச் சென்று, பிஸ்கட் பக்கெட் ஒன்றை திருடிக் கொடுத்துள்ள நிலையில், சிலர் சுற்றிவளைத்தமையால் சிறுமியை தள்ளிவிட்டு, தந்தை தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த காட்சி கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டு, சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வந்தன.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளமையுடன், விசாரணை ளின் அடிப்படையில், சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார் என சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் பாதையை நிர்மாணிக்க வரும் இந்திய தொழிலாளர்கள்

இந்திய கடன் உதவியின் கீழ் புனரமைக்கப் படவுள்ள மாஹாவோ முதல் ஓமந்தை வரையான ரயில் பாதைகளின் நிர்மாணப் பணிகளுக்காக இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்படவுள்ளனர் என இலங்கை ரயில்வே திணைக்கள ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புனரமைப்புப் பணிகளுக்காக இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ள அனைத்து உபகரணங்களுக்கும் வரிச்சலுகை வழங்கப்பட உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் இந் திய நிறுவனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப் படவுள்ளன. ஒரு கிலோ மீற்றர் ரயில் பாதையை நிர்மாணிக்க 23 கோடி ரூபா செலவாகும்.

எனினும் இலங்கை ரயில்வே திணைக்களத் தின் ஊழியர்களை பயன்படுத்தி புனரமைப்பு பணிகளை மேற்கொண்டால், ஏழு முதல் எட்டு கோடி ரூபா செலவில் ஒரு கிலோ மீற்றர் ரயில் பாதையை புனரமைக்க முடியும் என ரயில்வேத் திணைக்கள ஊழியர்கள் மேலும் தெரிவித்துள் ளனர்.

# சர்வதேச நாணய நிதியத்துடன் ஏப்ரலில் உத்தியோகபூர்வ பேச்சு

## அரசு அறிவிப்பு

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை கொள்கை ரீதியான இணக்கப்பாட்டை எட்டியுள்ளது. அதற்கமைய அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்துடனான உத்தியோகபூர்வ பேச்சுகள் ஆரம்பமாகும் என்று அரசு அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிதி அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ள நிலையில், திங்கட்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் திங்களன்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் பேச்சுகளை முன்னெடுத்துள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கு தெரிவிக்கப்படும்.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியத்துடன் உத்தியோகபூர்வ பேச்சுகளை முன்னெடுத்து உரிய ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு இந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது நிதி அமைச்சரிடம் கொள்கை ரீதியான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய சர்வதேச நாணய நிதியத்துடனான உத்தியோகபூர்வ பேச்சு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நாம் நடவடிக்கை எடுப்போம் என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார்.

அந்நிய செலாவணி இருப்பு வீழ்ச்சியடைந்துள்ளமையின் காரணமாக நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அத்தோடு எரிபொருள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் நாளாந்தம் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், சு.க. உள்ளிட்ட ஆளுந்தரப்பினரும், பொருளாதார நிபுணர்களும் தொடர்ச்சியாக இலங்கையை வலியுறுத்தி வந்தனர்.

எவ்வாறிருப்பினும் கடந்த இரு மாதங்களாக இது தொடர்பில் உயர் மட்டத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன அரசு தொடர்ந்தும் தெரிவித்து வந்தது. தற்போது டொலர் நெருக்கடி மற்றும் பொருளாதார பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதியளவில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு வொஷிங்டன் செல்லவுள்ளார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திறைசேரி செயலாளர் எஸ். ஆர். அடிகல உள்ளிட்டோரை சந்தித்து தீர்க்கமான பேச்சுகளை முன்னெடுத்திருந்தார்.

பொருளாதார ரீதியில் நாடு எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் தொடர்பில் இதன் போது பரந்தளவில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பான முன்மொழிவுகளும் இதன் போது முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை இதுவரையில் கடன் கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாங்களும் டீசலுக்காக வரிசையில் நிற்கின்றோம்!

## மருதபாண்டி எம்.பி. தெரிவிப்பு

இ.தொ.கா எப்போதும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில் சபை தலைவர் ராஜமணி பிரசாத் தலைமையில் மகளிர் தின விழா கொட்டகலை ரிஷிகேஷ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

'இன்று பொருள்களுக்காக வரிசையில் நிற்கின்றமை அனைவருக்கும் தெரியும். நாங்களும் டீசலுக்காக வரிசையில் நிற்கின்றோம். நின்றுதான் டீசலை பெற்று கொள்கின்றோம். இதற்கு முன்னரும் இ.தொ.கா. அரசுடன் பேசி மக்களுக்கானதை பெற்று கொடுத்துள்ளோம். சிலர் அரசில் இருக்கையில் வாய்திறக்கவே இல்லை. காரணம் பதவி பறி போகும் என்பதில் அவர்களுக்கே பயம்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் எப்போதுமே இ.தொ.கா நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை ஜீவனும் செய்து வருகின்றார். இ.தொ.காவுக்கு நிர்வாகம் தெரியவில்லை என்றால் 11 உள்ளூராட்சி மன்றங்களை எவ்வாறு கைப்பற்றியது எனக் கேட்க விரும்புகின்றேன்.

ஆளும் கட்சிக்கு நிதி கொடுப்பது போலவே எதிர்க்கட்சிக்கும் நிதி ஒதுக்குவதே எமது பிரச்சினை. ஆகவே இங்குள்ள உறுப்பினர்கள் வேலை செய்யாது விட்டால் அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர். காரணம் காங்கிரஸ் அனைத்து மக்களையும் ஒரே வகையில் பார்க்கின்றது.

நிர்வாகம் செய்யத் தெரியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். நிர்வாகம் தெரியவில்லையாயின் பதுளை, கண்டி, மாத்தறை பகுதிகளில் எவ்வாறு இ.தொ.கா உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளது. எனவே மக்களுக்கு நன்மையானதை செய்வதே எமது நிலைப்பாடு. – என்றார்.

# மதுபோதையில் வீதியில் அட்டகாசம் செய்த பெண் வவுனியாவில் கைது!

வவுனியாவில் மதுபோதையில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாகச் செயற்பட்ட பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்பாகவுள்ள வீதியில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் விதமாகப் பெண் ஒருவர் வீதியில் விழுந்து கிடந்துள்ளார்.

இதன்போது வீதியால் சென்றவர்கள் அதனை அவதானித்து அவசர நோயாளர் அம்புலன்ஸுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அவர்கள் வந்து அந்தப் பெண்ணை வைத்தியசாலை கொண்டு செல்ல அம்புலன்ஸில் ஏற்ற முற்பட்ட போதும் பெண் மதுபோதையில் விழுந்து கிடந்தமை தெரியவந்துள்ளதுடன், தொடர்ந்தும் அந்தப் பெண் வீதியில் நடமாடி பொது போக்குவரத்துக்கு இடையூறாக விபத்து ஏற்படும் வகையில் வீதியில் நடமாடித் திரிந்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்டதகவலையடுத்துஅங்குவந்தபோக்குவரத்து பொலிஸார் அந்தப் பெண்ணை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் பலர் திருகோணமலையில் கைது

திருகோணமலை – கொட்பே கடற்றொழில் துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொட்பே கடற்றொழில் துறைமுகத்தில் ஹெரோயின் போதைப் பொருளை பாவித்துக் கொண்டிருந்தபோது பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், இருவரையும் சோதனையிட்ட போது அவர்களிடமிருந்து 2.5 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கடற்றொழில் நடவடிக்கைக்காக மாத்தறை பகுதியிலிருந்து வருகை தந்த 29 மற்றும் 40 வயது உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் குறித்த சந்தேக நபர்கள் தொடர்பில் முன் குற்றம் இருக்கின்றனவா என்பது பற்றிய விவரங்களைத் தேடி வருகின்றோம் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிதியமைச்சரின் தவறான பொருளாதார முகாமை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் கவனம் செலுத்தாதமை கவலைக்குரியது!

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

பொருளாதார பாதிப்பு தீவிரமடைவதற்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டும். நிதியமைச்சரின் தவறான பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உரிய கவனம் செலுத்தாமலிருப்பது கவலைக்குரியது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் சர்வகட்சி மாநாட்டை நடத்துவது காலம் கடந்த தீர்மானமாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

வரிசையில் நிற்கும் மக்கள் அரசுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைப்பதை அரச தலைவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பிற்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும். நிதியமைச்சரின் தவறான நிதி முகாமைத்துவம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கவனம் கொள்ளாமல் இருக்கின்றமை கவலைக்குரியது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காக செயற்படுத்த வேண்டிய தீர்வுத்திட்டங்கள் தொடர்பிலான யோசனையை அரசிடம் பலமுறை முன்வைத்துள்ளோம். பங்காளிக் கட்சிகள் முன்வைத்த யோசனைகளை செயற்படுத்துவது தொடர்பாக அரசு கவனம் செலுத்தவில்லை.

பங்காளிக் கட்சிகளின் யோசனைகள் செயற்படுத்தப்படுவதை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவே தடுத்துள்ளார். தற்போதைய நிலையில் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்துள்ளதால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரப் பாதிப்பிற்கு தீர்வு காணும் நோக்கம் நிதியமைச்சருக்குக் கிடையாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காக ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமை காலம் தாழ்த்தப்பட்ட தீர்மானமாகும். சர்வகட்சி மாநாட்டின் யோசனைகள் முழுமையாக செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகத்திற்குரியது. – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# புறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் புத்தரை வைக்க அனுமதிக்கமாட்டோம்

## தர்மகத்தா சபையும் மக்களும் தீர்மானம்



சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை வைப்பதற்கோ பிரித் ஓதுவதற்கோ தாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என ஆலய தர்மகத்தா சபையும் ஊர் மக்களும் தீர்மானித்துள்ளனர்.

சைவ ஆலயமான இவ்வாலயத்தில் எந்த மதத்தவர்களும் வந்து வழிபட முடியும் எனவும், அவர்கள் தமது மதச் சின் னங்களை நிறுவுவதற்கோ அது சார்ந்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கோ முருகன் அடியார்களும் ஊர் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப்பிற்பகல் 4.30 மணியளவில் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி முருகன் ஆலய உள் வீதியில், தீர்த்தக் கேணிக்கு அருகே, நீண்ட காலமாக அரச மரம் ஒன்று உள்ளது. போர்முடிவடைந்தபின்னர் அவ்வப்போது ஆலயத்திற்கு வருகின்ற பிக்குகள் முருகனை வழிபட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், இன்று பௌர்ணமி தினத்தன்று இங்குள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையொன்றை வைத்து பிரித் ஓதுவதற்கு பிக்குகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன. குறித்த செய்தி அறிந்த மக்கள் கடும் சீற்றமடைந்தனர்.

இது தொடர்பாக ஆலயத்தில் நேற்று விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தின்போது சைவ ஆலயமான பறாளாய் முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு கடும் கண்டனமும் வெளியிடப்பட்டது.

இக்கூட்டம் நேற்று நடைபெறுவதாக அறிந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி ச. அனந்தி மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இதேவேளை, கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது படைப் புலனாய்வாளர்கள் பலர் ஆலயத்துக்கு அண்மையில் நின்று கூட்டத்தை அவதானித்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 21 அராலி வீதி ஆதன இல 50/31 என்ற ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் எமது பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 2998ம் இலக்க 05.05.2005ம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகமட் யூசுப் சமீன் என்பவர் இவ்வாதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த முகமட் யூசுப் சமீன் பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் வழங்கப்பட்ட 1269ம் இலக்க 08.03.2006 ந் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்** :- வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "பாம்படி மயிலன் புங்கடி" உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.நவரட்ணம் 20.05.1989 திகதியில் அளந்த 7 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 1207 இலக்கப் படத்தின் படி நெற்.பர.62 குளி 0.02 இதில் துண்டு "1" என்று சுட்டப்பட்ட பாகம் நெற்.பர.14 குளி 11.40 இதில் கிழக்கு பக்கமாக நெற்.பர.08 குளி 06 இனை உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.தனராஜா 30.04.2005 திகதியில் அளந்து 06 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வரைந்த 2743ம் இலக்கப் படத்தின் படியும் விஸ்தீரணம் நெற்.பர.8 குளி 6 இல் குறித்த 2743ம் இலக்கப்படத்தின் படி துண்டு 4 என சுட்டிக்காட்டப்பட்ட பாகம் நெற்.பர.(2) இரண்டும் அதற்குரியவைகளும் இதன் எல்லை

**கிழக்கு :- 12 அடி அகலமான ஒழுங்கை**
**வடக்கு :- குறித்த 2743ம் இலக்கப் படத்தில் துண்டு 3 எனச் சுட்டப்பட்டதும் சீனி முகமது அபூகாதிர் ஆதனம்.**
**மேற்கு :- இதன் மிகுதியான ஆதனம்.**
**தெற்கு :- குறித்த 2743ம் இலக்கப் படத்தின் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட பாகம் இவ் எல்லைகளும் இதடங்கலும்.**

தற்போது முத்துலிங்கம் இரவீந்திரனின் பெண் செல்வதி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடாத்து குறித்த ஆதனமானது இரவீந்திரன் பெண் செல்வதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**


---

**மலையகத்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனிதிகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கு பற்றி ஆவணத்தைத் தூதுவரிடம் கையளித்தனர்.

மலையகத் தமிழர் அபிலாஷைகள் ஆவணத்துடன், மலையகக் கல்வி தொடர்பான கோரிக்கைகளும் தூதுவரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜப்பானிய அரசையும், மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஜப்பானியத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, அரசியல்துறை மற்றும் முதலாம் செயலாளர் தகேசி ஒசாகி, அரசியல்துறை ஆய்வாளர் கநா மொரிவகி ஆகியோர் பங்குபற்றினர்.

மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களைப் பற்றியும் ஏனைய சமூகங்களை பற்றியும் ஓரளவு அறிந்துள்ளார்கள் எனவும் இனிமேல் மலைநாட்டு தமிழ் மக்களைப் பற்றி மென்மேலும் அறியவும், அவர்களுக்கு உதவிடவும் ஜப்பானிய அரசும், மக்களும் விரும்புகின்றனர் என ஜப்பானியத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, த.மு.கூ. தலைவர்களிடம் கூறியுள்ளார்.

இலங்கையில் வாழும் நான்கு பிரதான இனக்குழுக்களில், மலையகத் தமிழரையும் தனித்துவம் கொண்ட ஒரு இனக்குழுவினராக தாம் இனிமேல் குறித்துக்கொள்வதாகவும், ஜப்பானியத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் உறுதியளித்தார்.

ஐ.நா. அறிக்கையில் மலையகம் பற்றி இன்னமும் முறையாகப் போதியளவு குறிப்பிடப்படாமை பற்றியும் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி வினவினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, தற்போது ஒரு அரசியல் தலைமையாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது. இந்தப் படிவரிசையில் நாம் மலையக விவகாரங்களைப் படிப்படியாக சர்வதேச மயப்படுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையிலேயே மலையகத்தமிழர் அபிலாஷைகள் ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் படியே இந்தச் சந்திப்பு நிகழ்கின்றது. ஏனைய சர்வதேச நட்பு நாடுகளின் பிரதிநிதிகளையும், ஐ.நா. வதிவிட பிரதிநிதியையும் சந்திக்க நாம் தீர்மானித்துள்ளோம் எனத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷிக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.


ஜப்பான் எப்போதுமே இலங்கை மக்களால் பெரிதும் விரும்பப்படும் நட்பு நாடு என்ற முறையில் எமது மக்கள் தொடர்பில் ஜப்பானியத் தூதுவரின் கருத்துக்களைத் தாம் முழுமனதுடன் வரவேற்றதாகவும், அதேவேளை இலங்கை அரசுடன் இருக்கின்ற நட்புறவைப் பயன்படுத்தி, மலையக மக்களின் விவகாரங்கள் தொடர்பில் அக்கறையை அதிகரிக்கும்படி இலங்கை அரசை வலியுறுத்தும்படி தாம் ஜப்பானைக் கேட்டுக் கொண்டதாகவும், மலையக மக்கள் தொடர்பில் கல்வி வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும்படி ஜப்பானிய அரசைக் கோரியதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குக் கூறியுள்ளார்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
A9 1.5km - யாழ் நகர் 33km - புகையிரத நிலையம் 2km
20இற்கும் மேற்பட்ட பொதுவான வசதிகள் மற்றும் இயற்கையான சூழலில்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir



# இலங்கையில் உயரமான சீரடிசாயி இராஜகோபுரம் நாளை சிறப்புற நடைபெறுகின்றது கும்பாபிசேகம்

— எஸ். என். உதயநாயகம் —
(சீரடி சாயி மத்திய நிலையம், ஸ்ரீலங்கா)

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். அதிலும் சீரடிசாயி இராஜ கோபுர தரிசனம் பலகோடி புண்ணியம். சாதாரணமாக கோவில் இராஜ கோபுரங்களின் அமைப்பு பல தளங்களையும், எண்கோண வடிவங்களையும் கொண்டது. ஆனால், சீரடிசாயி இராஜ கோபுரத்தின் அமைப்பு சற்று வித்தியாசமானது. அதிலும் இங்கு அமைந்துள்ள இராஜகோபுரம் ஒரு புதுமையாக, வியக்கத்தக்கதாக அமைந்துவிட்டது. அதாவது கூர்மையான 18 பட்டயபக்கங்களையும், நான்கு திசைகளுக்கு அதிபதியாக, நான்கு சிறிய கோபுரங்கள் பக்கவாட்டில் இருக்கத்தக்கதாக தரையிலிருந்து 45 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ளது. முழுக்கோபுரம் தரையிலிருந்து 54 அடி உயரமாகவும், தனிக்கோபுர அமைப்பு கலசத்துடன் 27 அடியாகவும், கோபுர கும்பாபிஷேக நாள் 18 ஆம் திகதியாகவும், நாள் மாதம் வருடம் கூட்டுத்தொகை 18 என்று எல்லாமே எண்கணித சாஸ்திரப்படி 9 என்ற கணக்கில் கச்சிதமாக அமைந்திருக்கிறது.

சீரடி சாயி பாபாவுக்கும் ‘ஒன்பது’ என்ற எண் கணக்கிற்கும் நிறைய ஒற்றுமையுண்டு. அவரது சத்சரிதத்தைப் படித்தவர்களுக்கு இது புரியும். பொதுவாக இராஜகோபுரத்தை ‘ஸ்தல லிங்கம்’ என்று கூட கூறுவார்கள். இங்குள்ள சாயிமந்தீர் மூலஸ்தானத்தில் துவாரகா மாயி தோற்றத்தில், சற்குருநாதர் காலை மடித்திருக்கும் காட்சி கூட, சிவலிங்கத்தைப் பிரதிபலிப்பதாக இயற்கையாகவே அமைந்துவிட்டது.

இங்குள்ள கோபுரத்தினுள்ளே வாஸ்து சாஸ்திரம் பார்க்கப்பட்டு, சீரடியந்திர செப்புத்தகடு, ஒன்பது நாணயங்கள்,சீரடி திருவுருவம், நவதானியம், செப்புத்தகட்டில் பதியப்பட்ட சீரடி வேத மந்திர யந்திரம், உதி, விலையுயர் பொருள்கள் என்பன பிரதீட்சை செய்யப்பட்டுள்ளன.

கிழக்கில் உதிக்கும் கதிரவனின் முதல் ஒளிக்கதிர், இந்தக்கோபுரத்தில் பதியப்பட்ட கண்ணாடித் துவாரத்தினூடாக, மேல்குறிப்பிட்டவை தூரிய பொக்கிஷங்களில் பட்டுத் தெறித்து வெளியுலகிற்கு பாபாவின் சக்தியைப் பரப்புகிறது.

விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் கதிரொளியிலிருந்து வெளிவரும் அல்ட்ராவைலட் கதிர், செப்புத்தகட்டில் பட்டு மனித உடலுக்கு நன்மையைத் தருகிறது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட செப்புதங்க மூலாமான கூரிய கலசமானது, தனது கூரிய முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும், பிராணசக்தியைக் கிரகித்து வெளிவிடுகிறது. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புத்துணர்ச்சி, புது உணர்வு, உள்ளத்தூய்மை, ஆன்மீகஊர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்புசக்தி அடைகிறோம்.

சீரடிசாயியின் கூர்மையாக கோபுரத்தின் தத்துவமே இதுதான். எந்தப் பொருளும் வைத்தாலும் பழுதடையமுடியாத கோட்பாட்டைக் கொண்ட, கிரேக்கநாட்டு பிரமீட் அமைப்பையும் ஒத்துநிற்கிறது.

கோபுரம் உயர்ந்திருப்பதால், நெடுந்தூரத்திற்கு அப்பால் இருந்து கோபுரத்தை வணங்குபவர்கள், சீரடிசாயியை தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவார்கள். தூரத்திலிருப்பவர்களுக்கு சீரடிசாயியின் பார்வைபடரவே இராஜகோபுரம் அமைக்கப்பெற்றது. ஓர் இராஜகோபுரத்தின் தத்துவம் நாட்டிற்கு அரசன் ஒருவன் முதன்மையானவனாக இருக்கிறானோ, அதேபோல ஓர் ஆலயத்துக்கு கோபுரம் இன்றியமையாததாக அமைகிறது.

‘சீரடி சாயிபாபா மத்தியநிலையம் ஸ்ரீலங்கா என்ற சாயி ஸ்தாபனம், சாயிநிலையமாக 1966 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, 55 வருடங்களைக் கடந்துள்ளது, இங்கு நிறுவப்பட்டுள்ள சீரடிசாயி இராஜகோபுரம், இலங்கைத் திருநாட்டிலேயே அதிமிகு உயரமானதாகும். தலைநகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தக்கோபுரம், சாயி நிலைய மகளிர் அணித் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதனின் மேற்பார்வையில், தென் இந்தியா பூம்புகார் சிற்பக்கலைஞர் பிரசித்திபெற்ற ஸ்தபதி பாவாடை செல்வராசு குழுவினர் கைவண்ணத்தில், கட்டடக் கலைஞர் திருமதி சுபாஸினி கௌசிகன் அவர்களின் வரைபட உதவியுடன், திரு.ஆர்.சிவகுமார் அவர்களின் கட்டடநிறுவனமான CIVZCONN(PVT)LTD தலைமையில் எழுப்பப்பட்டுள்ளது. வடஇந்தியா சீரடி சமஸ்தானத்தின் தலைவர் Sri. Kanhuraj Bagate, தென் இந்தியா மைலாபூர் சீரடிசாயி ஆலய அகில இந்திய சாயிசமாஜ தலைவர் திரு. கே.தங்க ராஜ் அவர்களின் ஆலோசனையுடன், சீரடி இராஜகோபுர மஹாகும்பாபிஷேகம், மார்ச்சு மாதம் பங்குனி உத்திரம் 18ஆம் திகதி, நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 10.41 மணிவரையுள்ளசுபநேரத்தில்,திரு.கே.தங்கராஜ் அவர்களினால் ஸ்ரீசாயிவிஷ்ணு கோவில் ஆதீனகர்த்தா பிரசித்திபெற்ற பிரதமகுரு பிரதிஷ்டா வித்தகர், கிரியாக்ரமஜோதி, ப்ரம்மஸ்ரீ இலஷ் மீகாந்த் ஜெக தீசக்குருக்கள் MA, BCA (Hons) DIT J.P அவர்களின் கோபுரமாக பூஜையுடன் இலங்கைத் திருநாட்டில் பிரபலமான சீரடிசாயி சிவாச் சாரியார்கள் சகிதம், முதல் முறையாக முக்கிய பிரமுகர்களாக கஜமுக பிரவேசமாக யானை இராஜகோபுர வாசலைத் திறந்து வைக்க, கோமாதா தரிசனமாக பசுமாடு கன்றுடன் வருகை தரவுள்ளது.

முன்னோட்டமாக முதல்முறையாக ‘சீரடி சாயி தீப விளக்குபூஜை’ சுமங்கலிப் பெண்களால், இன்று வியாழக்கிழமை, பௌர்ணமிதினத்தன்று மாலை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட சீரடிசாயி பாபாவின் உதியும், விளக்கு பூஜைக்காக விசேடமாக தருவிக்கப்பட்ட சீரடிசாயி திருவிளக்கும், இந்த பூஜையில் பூஜீக்கப்படும். மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை ஒன்பது நாள்கள் மண்டலாபூஜை இடம்பெறும். காலையும் மாலையும் யாகம், அபிஷேகம், சாயிபஜனை, நான்கு காலஆராத்திகள், பல்லக்கு பவனி என்பன நடைபெறும். 48 ஆவது நாள் (5.5.2022) சிறப்பு பூஜையாக சங்காபிஷேகம், சித்திரத்தேர் போன்ற நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

# இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் கூட்டமைப்புக்கு ஜனாதிபதியைச் சந்திக்க நிச்சயம் வாய்ப்பு வழங்குவோம்!

## இப்படிக் கூறுகிறார் ரமேஷ் பத்திரண

இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையிலும், அரசியல் கட்சி என்ற ரீதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. அதற்கான வாய்ப்புக்கள் நிச்சயம் வழங்கப்படும் என்று அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு, வடக்கில் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்களை மையமாகக் கொண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவிருந்தது.

எவ்வாறிருப்பினும் இந்த சந்திப்பு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் திங்கள் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டமைப்புடனான சந்திப்பிற்கு இப்போது வாய்ப்பு வழங்கியுள்ளமைக்கான காரணம் என்ன என்று கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

'இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையிலும், அரசியல் கட்சி என்ற ரீதியிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. அதற்கான வாய்ப்புக்கள் அந்தக் கட்சிக்கு வழங்கப்படும்'. – என்றார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி இதே போன்று மேற்கூறப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் , ஜனாதிபதிக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவிருந்தது.

எனினும் பின்னர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் இரு தரப்பு சந்திப்பு இடம்பெறவிருந்த நிலையில், இறுதி நேரத்தில் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி காணி ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் ஜனாதிபதி செயலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்த போதிலும், அனுமதி வழங்கப்படாதமை குறிப்பிடத்தக்கது.



# சர்வ கட்சி மாநாட்டில் எடுக்கப்படும் திட்டங்கள் செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகத்துக்குரியது!

## வீரசுமன வீரசிங்க எம்.பி. தெரிவிப்பு

சர்வ கட்சி மாநாட்டை நடத்தி நாட்டின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண கால அவகாசம் கிடையாது.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசு மதிப்பளித்திருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டியிருக்கலாம்.

சர்வ கட்சி மாநாட்டில் முன்வைக்கப்படும் தீர்வு திட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகத்துக்குரியது என நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு வரிசையில் நிற்பது நாட்டு மக்களின் அன்றாடக் கடமையாகி விட்டது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர்களும், அரசின் பிரதான தரப்பினரும் குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

தவறான பொருளாதார முகாமைத்துவம் தற்போது பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

நடுத்தர மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை எம்மால் நன்கு உணர முடிகிறது.இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதை அறிந்தே அரசிடம் பல முறை பல திட்டங்களை முன்வைத்தோம்.

பங்காளி கட்சிகள் முன்வைத்த யோசனைகளை செயற்படுத்துவதை விடுத்து அரசு பங்காளிக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கையை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தியது.

நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சர்வகட்சி மாநாட்டை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது, பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ள நிலைமையில் சர்வகட்சி மாநாட்டை நடத்தித் தீர்வு காண கால அவகாசம் கிடையாது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துகளுக்கும், யோசனைகளுக்கும் மதிப்பளித்திருந்தால் தற்போது பிரச்சினை தீவிரமடைந்திருக்காது.

தான்தோன்றித்தனமான பொருளாதார தீர்மானங்கள் முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்படும் யோசனைகள் முழுமையாக செயற்படுத்தப்படுமா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கம்யூனிச கட்சி அரசுக்கு கட்சி என்ற ரீதியில் யோசனைகளை முன்வைக்கும்.பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

# பொருளாதார நெருக்கடிக்கு அரசு பொறுப்புக்கூறவேண்டிய தேவைகிடையாது

## சஞ்ஜீவ எதிரிமான்ன எம்.பி. இப்படிக் கருத்து



பொருளாதார நெருக்கடிக்கு அரசு பொறுப்புக்கூறவேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் தவறான தீர்மானங்களால் பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறவில்லை.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவனின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசின் தவறான தீர்மானங்களால் பொருளாதார பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்த்தரப்பினர் அரசியல் கோணத்தில் இருந்துகொண்டு குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். பொருளாதாரப் பாதிப்பிற்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

தவறான அரசியல் மற்றும் பொருளாதாரத் தீர்மானங்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் பூகோள மட்டத்தில் பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுனாமி இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட போது முன்னாள் ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்ககுமாரதுங்கவின் மீது எவரும் குறை கூறவில்லை.

சுனாமி அனர்த்தத்தைப் போன்றே கொவிட் தாக்கத்தையும் ஓர் இயற்கை அனர்த்தமாகக் கருத வேண்டும்.

கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்பு இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை முகாமைத்துவம் செய்ய அரசு பொருத்தமான தீர்மானங்களை முன்னெடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடிக்கொள்ள எதிர்த்தரப்பினர் முயற்சிக்கின்றமை அநாகரிகமான தாகும். – என்றார்.

# ஹோமாகமையில் பதற்ற சூழ்நிலை; வாகன போக்குவரத்தும் முடக்கம்!

எரிவாயு கொள்வனவு தொடர்பில் கொழும்பின் புறநகர்– ஹோமாகம நகரில் நேற்று (புதன்கிழமை) காலை நடைபெற்ற போராட்டத்தால் வாகன போக்குவரத்துக்கு சிறிது நேரம் தடை ஏற்பட்டது.

பிரதேசத்தில் அமைந்துள்ள எரிவாயு நிறுவனத்தின் முன்னால் ஏராளமானோர், எரிவாயு கொள்கலன்களைப் பெறுவதற்காக நின்றனர்.

எனினும் எரிவாயு கொள்கலன்கள் வழங்கப்படமாட்டாது என முகவர்கள், அங்குள்ள மக்களிடம் தெரிவித்ததையடுத்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதன்போது, சுமார் 200–300 பேர் நகரின் மத்தியில் உள்ள வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இருப்பினும் கையிருப்பு இருந்தால் எரிவாயு கொள்கலன்கள் வந்ததும், விநியோகிப்போம் என முகவர்கள் உறுதியளித்ததை அடுத்து பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைத்தனர்.

# பரசிட்டமோல் உட்பட்ட மருந்துகளின் விலை எகிறல்; இன்று முதல் விநியோகம்

மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலைகள் 29 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, மருந்து நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள், நேற்று முதல் பிரதான மருந்தகங்களுக்கு மருந்து மற்றும் உபகரணங்களை விநியோகிக்கத் தீர்மானித்துள்ளனர்.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கன்கந்த இதனைத் தெரிவித்தார்.

விற்றமின்கள் போன்ற கட்டுப்பாடற்ற மருந்துப் பொருள்கள் நேற்று முதல் 29 வீதம் அதிகரித்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் 60 மருந்து வகைகள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

ஏற்கனவே மருந்துகள் தொடர்பான வர்த்தமானி வெளியிடும் வரை மருந்து நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மருந்தகங்களுக்கு மருந்து வழங்குவதை நிறுத்தியிருந்தனர்.

இதேவேளை வர்த்தமானி மூலம் 40 வீதம் மருந்துகள் கட்டுப்படுத்த முடியாத பொருள்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.03.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

## தற்போதைய நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் அவர் மேலும் தெரிவித்தாவது: – இன்று ஒரு சவாலான நேரத்தில் நான் உங்களிடம் உரையாற்றுகின்றேன்.

உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதேபோன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன்.

கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இந்தநிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதி பூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவர். நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் முன்னணியில் இருந்த படையினர் மற்றும் போரில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்துச் சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்றால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருள்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருள்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகின்றோம்.

இந்த நெருக்கடி ஒருபோதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கின்றேன்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதேயாகும்.

இன்றைய பிரச்சினைகளுக்கு மூல காரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடி ஆகும்.

ரூபா நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமை யின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும்.

கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால், ரூபா நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, நமது வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசு பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகிய– வற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இந்தப் பிரச்சினையை முன்கூட்டியே கண்டுகொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம்.

மேலும், உள்நாட்டில் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கின்றோம்.

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகின்றது.

கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால் தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

அதனால்தான், முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கொரோனாத் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேபோன்று, தகவல் தொழிநுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசு துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகின்றது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது.

தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆரோக்கியமான தாய் நாட்டில் எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன்.

அமைச்சரவை, நாடாளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன் – என்றார்.

---

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மோடி - பஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷவின் இந்தியாவுக்கான இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கைக்கு உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தியக் கடன் வசதியை பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இந்தியாவின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி ஆகியோரையும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## ஒரு லட்சம் ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நீதி அமைச்சரின் நடமாடும் சேவையில் காணாமல்போனோருக்கான அலுவலகம் வேண்டாம் என நாங்கள் கூறியிருந்தோம். இழப்பீடோ, மரணச்சான்றிதழோ தேவையில்லை எனக் கூறியிருந்தோம்.

அப்படியிருந்தும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மீது திடீரென ஏன் அக்கறை வருகின்றது. ஒரு இலட்சம் ரூபா நிதியை எமது உறவுகளுக்கு வழங்கி அந்த நிதியில் வாழ்க்கைச் செலவைக் கட்டியெழுப்ப முடியுமா? இந்த நிதியில் எமது உறவுகள் வாழ முடியுமா? நீதிக்காக இதுவரை காலமும் நாம் போராடிக்கொண்டிருந்தோமே தவிர ஒரு இலட்சம் ரூபாவுக்காகப் போராடவில்லை.

போர் முடிவடைந்து 13 வருடங்களைக் கடந்தும் எமது உறவுகளைத்தான் தேடிக்கொண்டிருக்கின்றோம். உறவுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கி உறவுகளைத் திருப்திப்படுத்துவதாக நீதி அமைச்சர் இவ்வாறு கூறியிருக்கின்றார். எமது உறவுகள் நிதிக்காகப் போராடவில்லை; நீதிக்காகவே போராடுகின்றோம் – என்றார்.

---

## பொருளாதாரச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழப்புக்கும் நிதி அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும். அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்த போதிலும் தொடர்ந்தும் ரூபாவின் பெறுமதி ஒரே அளவில் காணப்பட்டது.

இதன் காரணமாக வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் வங்கிகளுக்கு டொலர் அனுப்புவதைத் தவிர்த்தனர் – என்றார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.